பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 01 2026** **FRIDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2)** வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் சிறு-குறு தொழில்துறை முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**3)** வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தம்முடன் விவாதிக்க தயாரா என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வினவியுள்ளார்.

**4)** அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு தொடர்பான புகார்கள் மீது 3 மாதங்களுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

**5)** இந்திய மகளிர் ஹாக்கி அணியின் முதன்மை பயிற்சியாளராக **Sjoerd Marijne** நியமிக்கப்பட்டுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>>

மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

சென்னையில் உள்ள மருத்துவ பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — சி பி ராதாகிருஷ்ணன் - 57 Sec.)***

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் சிறு-குறு தொழில்துறை முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழ் ஒன்றில் வெளியான கட்டுரை ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

ஏற்றுமதி வளர்ச்சியிலும் இந்த துறை பெரிய அளவில் பங்களித்து வருவதாக அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின்

தம்முடன் விவாதிக்க தயாரா என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வினவியுள்ளார்.

இன்று சென்னையில் மத்திய அரசின் நடப்பாண்டிற்கான நாள்காட்டியை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தேர்தலை கருத்தில்கொண்டு இந்த சட்டம் குறித்து தவறான தகவலை முதலமைச்சர் பரப்பி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

இந்த சட்டத்தின் நன்மைகள் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

திட்டத்தின் செயலாக்கத்தில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்கான அம்சங்கள் இந்த சட்டத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் இதுகுறித்து விரிவாக விவாதம் நடத்தப்பட்டதையும் டாக்டர் எல். முருகன் சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>>

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தை தோற்றுவித்த முன்னாள் முதலமைச்சர் எம் ஜி ராமச்சந்திரனின் பெயரை மறைக்கும் முயற்சியில் திமுக அரசு ஈடுபட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் எம் ஜி ராமச்சந்திரனின் பெயரும், படமும் நீக்கப்பட்டதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக மக்களின் நலனுக்காக பாடுபட்ட அன்னாரது படத்தை உடனடியாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் ஐந்தாயிரம் ரூபாய் ரொக்கப்பணத்துடன் பொங்கல் பரிசு தொகுப்பினை திமுக அரசு வழங்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

பொங்கல் பரிசு தொகுப்பிற்காக தமிழக அரசு ஒதுக்கியுள்ள தொகை போதுமானது அல்ல என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

அரசுக்கு சொந்தமான நிலம், நீர்நிலைகள் மற்றும் பூங்காக்கள் ஆக்கிரமிப்பு தொடர்பாக புகார்கள் வந்தால் **30** நாட்களுக்குள்

விசாரணையை தொடங்கி மூன்று மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு எம் எம் ஸ்ரீவத்சவா, திரு அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரணை மேற்கொள்ளாத அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நீலகிரி, கோவை, தேனி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte —செந்தாமரை கண்ணன் - 37 Sec.)***

இதற்கிடையே, நெல்லை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

***(Voice Byte — திருமலைக்குமார் - 40 Sec.)***

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மீதான தடையை உறுதி செய்யும் வகையில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாநிலம் முழுவதும் சோதனை மேற்கொண்டு வருகிறது.

இதுவரை, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்த **290**-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த ஆறு மாதங்களில் மட்டும் **13** தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் **9** ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அதில் **2** ஆயிரத்து **500**-க்கும் மேற்பட்ட விதிமீறல்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ள ஆசியாவின் மிகப்பெரிய தெப்பக்குளத்தின் நான்கு கரைகளிலும் நந்தவனம்

அமைக்கும் பணியினை மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா இன்று தொடங்கிவைத்தார்.

----------------

தருமபுரி மாவட்டம் புலிக்கரை மற்றும் ஜாஹீர் வரகூரில் புதிய நியாயவிலைக் கடைகளை ஆட்சியர் திரு சதீஷ் இன்று தொடங்கிவைத்தார்.

-------------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் தலைக்கவசம் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ஸ்ரீகாந்த் இன்று தொடங்கிவைத்தார்.

------------------

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட மூன்று இடங்களில் நவீன அங்காடி மையங்கள் இன்று தொடங்கப்பட்டன.

-------------

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் பருவத்தேர்வு முடிவுகள் இன்று இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

-------------

நீலகிரி மாவட்டத்தில் மலை ரயில் பாதையில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக, மேட்டுப்பாளையம் — உதகை இடையேயான மலை ரயில் போக்குவரத்து இன்று ஒருநாள் ரத்து செய்யப்பட்டது.

------------

கோவை மாவட்டம் பொள்ளாச்சி ஆழியாறு அணையிலிருந்து பாசனத்திற்காக இன்றுமுதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

---------------

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் உள்ள சங்கரநாராயணர் கோவிலின் திருவாதிரை திருவிழா தேரோட்டம் இன்று நடைபெற்றது.

---------------

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்தில் உள்ள அருள்மிகு தாணுமாலய சுவாமி கோவில் மார்கழி திருவிழா தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

-----------------

சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களுக்கு உட்பட்ட நியாயவிலைக் கடைகள் மூலம் 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வரும் ஞாயிறு, திங்கள் கிழமைகளில் பொது விநியோகத் திட்டப் பொருட்கள் அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கப்படும் என்று கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இந்திய மகளிர் ஹாக்கி அணியின் முதன்மை பயிற்சியாளராக **Sjoerd Marijne** நியமிக்கப்பட்டுள்ளார்.

டோக்கியோ ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் இந்திய மகளிர் அணி நான்காவது இடத்தை பிடித்ததற்கு காரணமானவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

------------------

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணியை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் நாளை இணையதளம் வாயிலாக நடைபெறும் என்று கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

<<<<<<<**END**>>>>>>